பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 24 புதன்கிழமை (06-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 160

# வவுனியா மாமடுவில் அதிரடி!

# ஆறு காவலரண்கள் தகர்ப்பு!!

### விகாரைக்கருகில் 4 முஸ்லிம்களின் சடலங்கள்!

பொலன்னறுவையில் உள்ள சரித்திரப்பிரசித்தி பெற்ற சோமாவதி சைத்திய விகாரை அருகில் கடந்த சனிக்கிழமை நான்கு முஸ்லிம்களின் சடலங்கள் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

அலஞ்சிப்பொத்தானை தாக்குதலின் போது தப்பியோடிய முஸ்லிம்களாக அவர்கள் இருக்கலாம் என்று நம்பப்படுவதாகப் பொலீஸார் கூறினர்.

## ஒன்பது படையினர் உயிரிழப்பு
## சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், மே 6

வவுனியா நொச்சிமோட்டை மாமடுப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஒன்பது காவலரண்கள் தகர்த்தெறியப்பட்டன; ஒன்பதுக்கும் அதிக படையினர் உயிரிழந்தனர்; சிப்பாய் ஒருவரின் சடலமும் ஒன்பது நவீனரகத் துப்பாக்கிகள் உட்பட பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை 12.20 மணியளவில் நடைபெற்ற இந்த அதிரடித் தாக்குதல் சுமார் ஐந்து நிமிட நேரம் நீடித்ததாகவும்—

தாக்குதலில் சிக்கி படையினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகவும் தெரியவந்தது.

படுகாயமுற்ற பல படையினர் முகாமுக்குத் தப்பி ஓடினர்.

தாக்குதலில் ஒன்பது படையினர் உயிரிழந்தனர் என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டது எனினும் படையினர் தரப்பு இழப்பு கூடுதலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. [உ-3-165]

### வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 6

வவுனியா மாமடு ஸ்ரீலங்கா இராணுவக் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான லெப்டினன்ட் ஜெகதீஸ்வரன் [பரமசிலன் ஜெ சீலன் - வவுனியா] வீரமரணம் அடைந்தார். [உ-165-3]

### தெரிவுக்குழு 19 இல் கூடும்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு இம்மாதம் 19 ஆம் திகதி கூடவிருக்கிறது (ஒ-3)

## 70 பேருக்கு 18 ஆம் திகதி எழுது வினைஞர் நியமனம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்டத்தில் அமைய அடிப்படையில் எழுது வினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில், தெரிவு செய்யப்பட்ட 304 பேரில் 70 பேருக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் நியமனம் வழங்கப்படவிருக்கிறது

இவர்களில் 48 பேருக்கு கல்வித் திணைக்களத்திலும், 32 பேருக்கு சுகாதாரத் திணைக்களத்திலும் நியமனம் வழங்கப்படும் என்று யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் திங்கட்கிழமை செயலகத்தில் நடைபெறவிருக்கின்றன

போட்டிப் பரீட்சையில் முன்னணிப் புள்ளிகளைப் பெற்றோருக்கே முதலில் நியமனம் வழங்கப்படுகிறது.

ஏனைய திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்கள் குறித்து விவரங்கள் தமக்குக் கிடைத்ததும் அந்த இடங்களுக்கு எஞ்சியோர் நியமிக்கப்படுவர் என்று யாழ் அரச அதிபர் தெரிவித்தார். [உ-3]

## தமிழீழப் பெண்கள் ஆய்வுநிறுவனம் உதயம்

யாழ்ப்பாணம் மே 6

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இந்த ஆய்வு நிறுவனம் இயங்கும்.

கிளிநொச்சியில் கடந்த மார்ச் 7, 8 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழீழப் பெண்கள் தேசிய மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது

பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஆக்க பூர்வமான வேலைத் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கு முதலில் பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் விஞ்ஞான ரீதியில் ஆய்வு செய்யப்படுவது அவசியம் இந்த விஞ்ஞான ஆய்வின் அவசியத்தையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அள்ளப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், மே 6

வவுனியா-நொச்சிமோட்டை மாமடுவில் காவலரண்கள் தகர்ப்பின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு :-

| | | |
|---|---|---|
| ★ 303 ரக எல். எம். ஜி. | — | 01 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 09 |
| ★ ஜி. 3. ஏ. 3 ரகத் துப்பாக்கிகள் | — | 03 |
| ★ அதற்குரிய ரவைக்கூடுகள் | — | 24 |
| ★ ரி - 56 ரகத் துப்பாக்கிகள் | — | 03 |
| ★ 40 மி. மி கைத்துப்பாக்கி | — | 01 |
| ★ 303 ரகத் துப்பாக்கி | — | 01 |
| ★ அதற்குரிய ரவை கூடு | — | 01 |
| ★ ரி - 81 ரகத் துப்பாக்கி ரவைக்கூடுகள் | — | 06 |
| ★ நடுத்தர ரவைகள் | — | 970 |
| ★ நேட்டோ ரவைகள் | — | 1,150 |
| ★ 303 ரவைகள் | — | 1,100 |
| ★ ஜே. ஆர். ரகக் கைக்குண்டுகள் | — | 02 |
| ★ ரி. என். டி. கைக்குண்டுகள் | — | 01 |
| ★ வெளிச்சக்குண்டு | — | 01 |
| ★ கிற்பாக் | — | 10 |
| ★ ஹெல்மட் | — | 06 |
| ★ சப்பாத்து | — | 6 சோடி |

[ஓ-3-165]

## நல்லூர் இசை விழா இன்று இறுதி நாள்

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் நடத்தி வரும் தமிழிசை விழா இன்று [ஐந்தாம் நாள்] நடைபெறும் நிகழ்ச்சிகளுடன் பூர்த்தியாகின்றது.

இன்றைய விழாவில் விடுதலைப் புலிகள் முக்கிய பிரமுகர்கள் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் கோலாகலமாக நடந்து வரும் இவ்விசை விழாவில் நாளாந்தம் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் இசை விருந்து பருகி மகிழ்கின்றனர்.

குடாநாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் ரசிகர்கள் விழாவுக்கு வந்திருந்தனர்.

நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்களை ஒன்று திரட்டி விழா சிறப்பாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## சி. ஐ. டி. முன் ஆஜராகுமாறு உடுகம்பொலவுக்கு பணிப்பு

கொழும்பு, மே 6

சட்டத்தரணி விஜயனாராச்சி கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு உதவுவதற்காக இரகசியப் பொலிஸார் முன்னிலையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆஜராகும்படி பிரதிப் பொலீஸ்மா அதிபர் உடுகம்பொலவுக்கு நீதிமன்றம் ஆணைபிறப்பித்தது.

மாளிகாகந்தை மாஜிஸ்திரேட் இந்த ஆணையை நேற்று முன்தினம் விடுத்தார்.

நீதிமன்றம் இதேபோன்ற உத்தரவை முன்னரும் விடுத்திருந்தது என்பதும்—

ஆனால் தலைமறைவாக இருந்துவரும் உடுகம்பொல அந்த உத்தரவை ஏற்றுச் செயற்படவில்லை என்பதும் தெரிந்தவையே. (உ-10)

## பிரேமா வெளிநாடுகளுக்கு செல்லாததன் மர்மம் என்ன?

கொழும்பு, மே 6

சோதிடர்களின் ஆலோசனைப்படியே ஜனாதிபதி பிரேமதாஸா வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்த்து வருகின்றார்

''வாஷிங்டன் போஸ்ட்'' பத்திரிகையில் ஸ்ரீவ் கொல் என்பவர் முன்கண்டவாறு எழுதியுள்ளார்.

ஜனாதிபதியாக வந்த பின்னர் திரு பிரேமதாஸா வெளிநாடு எதற்கும் செல்லாது இருந்து வருகின்றார்.

வெளிநாட்டுப் பயணத்தை அவர் மேற்கொண்டால் அவர் உயிரிழப்பார் என்று அவருக்கு சோதிடர்கள் ஆலோசனை கூறியிருக்கின்றனர் என்று சொல்லப்படுகிறது.

இப்படி அவர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

## மட்டு. அம்பாறை தமிழருக்கு கொலைப் பயமுறுத்தல்

### அங்கு பெரும் பதற்ற நிலை

யாழ்ப்பாணம், மே 6

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தமிழர்களுக்கு பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதால், அங்கு பெரும் பதற்றநிலை நிலவுவதாகத் தெரியவருகிறது.

முஸ்லிம்களும், ஊர்காவல் படையினருமே தமிழ் மக்களுக்கு கொலைப் பயமுறுத்தலை விடுக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

திருகோணமலை அகதி முகாம்களில் உள்ள தமிழ் மக்களும் கொலை செய்யப்படுவர் என்று மிரட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் கடந்த 28 ஆம் திகதி முதல் 30 திகதி வரை மட்டக்களப்பு -பொலன்னறுவ எல்லைப்புற கிராமங்களில் 78 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அதையடுத்து அங்குள்ள மக்கள் [illegible] இடம் [illegible] வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஒ-3)

### முச்சந்தி முரளி



ப[illegible] எண்[illegible] போலை......!

## விடுதலைப் புலிகள் விவகாரம்:

## அமைச்சர் சவானின் கருத்து வாழப்பாடிக்கு அதிர்ச்சி!

சென்னை, மே 6

போதிய ஆதாரங்கள் இன்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்ய முடியாது என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் அண்மையில் தெரிவித்த கருத்து அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி முன்கண்டவாறு கூறியிருக்கிறார்.

சென்னையில் கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இராமமூர்த்தி மேலும் கூறியிருப்பதாவது;

விடுதலைப் புலிகளின் தேச விரோத நடவடிக்கைகள் நாட்டுக்கு பெரிய அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக நாடு முழுவதும் பரவலாகக் கருதப்படும் நிலையில் திரு. சவான் விடுத்திருக்கும் இக்கருத்துக் காரணமாக ராஜீவ் காந்தி படுகொலைக்குக் காரணமான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மீன் வாங்கும்போது எச்சரிக்கை தேவை!

### மக்களுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம், மே 6

மீன் வாங்கி உண்பவர்களைக் கவனமாக இருக்கும்படி யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் எச்சரித்திருக்கிறார்.

தற்போதைய நெருக்கடி நிலையை பயன்படுத்தி, உண்பதற்கு தகாத — உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய— கடல் பாம்பு (Sea Snake) போன்ற கடல் வாழ் உயிரினங்கள் சாதாரண மீன் வகைகளுடன் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தோலுரிக்கப்பட்டு, துண்டுகளாக விற்கப்படும் மீன் வகைகளை வாங்குபவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

கடந்த மாத இறுதியில் இவ்வாறு தோலுரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட மீன் வகை ஒன்றை வாங்கி உண்ட— யாழ். அத்தியடியில் வசிக்கும் —ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்— இவ்வாறு டாக்டர் தெய்வேந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கடைக்குரிய இரு முதிரை அலுமாரிகளும், ஒரு ஷோக்கேசும் விற்பனைக்குண்டு. தொடர்பு: சே. யோகராசா, 49/4, யாழ். றோட், யாழ்ப்பாணம். [ஸ்ரீதர் படமாளிகைப் பின்பக்கம்] [1840]

## விற்பனையாகின்றன

சகல விதமான அப்பியாசக் கொப்பிகள், C.R கொப்பிகள் இன்னும் பலவிதமான பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் விற்பனையாகின்றன. 'சோபிக' 363, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். [20819]

## தேவை

1992ஆம் ஆண்டு A/L படிக்கும் மாணவிக்கு பௌதீகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களை வீட்டில் வந்து கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை. எழுதவும் இல: 403, C/o உதயன். [20812]

பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றுக்கு ஆங்கில அறிவுடைய காசாளர், விநியோகத்தர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். 10-5-92 இற்கு முன் விண்ணப்பிக்கவும். தொடர்பு; இல. 840, C/o உதயன். [சி/2272]

பிரபல்யமான படப்பிடிப்பு நிலையத்திற்கு பயிலுனர்கள் [Photographic] தேவை. ஆர்வம் உள்ள இருபாலாரும் விண்ணப்பிக்கவும். தொடர்பு: இல. 841, C/o உதயன். [சி/2273]

## மாணவர்களுக்கு

அப்பியாசக் கொப்பி, புத்தகங்கள் மலிவான விலையில் விற்பனையாகின்றன. றோணியோ குறைந்த செலவில், உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்திக்கருகாமை யாழ்ப்பாணம். [சி-2267]

## காவலாளி தேவை

அமைய அடிப்படையில் கடமையாற்றுவதற்கு காவலாளிகள் தேவை. தகுதியுடையோர் சுய விவரத்துடன் 1992 05-15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

யாழ். மாவட்ட
அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்
[சி-1983]

## வகுப்புகள்

தேக் ஐசிங் வகுப்புகள். குறைந்த செலவில் மிகக்குறுகிய காலத்தில் திறமை மிக்க ஆசிரியையால் கற்பிக்கப்படும் ஆரம்பம்: 09-05-1992 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணி. S. சிவலிங்கம், ஜனோதயம், தலங்காவற் பிள்ளையார் கோவிலடி, திருநெல்வேலி. [20830]

## இலவச திருமண சேவை

33 வயது, ரோகிணி, பிரபல கொழும்பு Restorent விடுதி உரிமையாளருக்கு ஏற்ற படித்த மணமகள் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில் து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4830]

39 வயது விசாகம், விவசாய ஆய்வு பெண் உத்தியோகத்தருக்கும், 34 வயது அத்தம், CIMA - II உதவிப் பெண் கணக்காளருக்கும் ஏற்ற மணமக்கள் தேவை. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4827]

33 வயது, அனுசம், செவ்வாய் அற்ற, பாவம் குறைந்த, சைவபோசன B. Sc ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை ஞாயிறு காலையில் சந்திக்கலாம் து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி [4826]

28 வயது, மிருகசீரிடம் செவ்வாய் 4 நோர்வேயில் உள்ளவருக்கு தோதான அல்லது உள்நாட்டு மணப்பெண்ணும், 30 வயது அத்தம் செவ்வாய் 2 பெண்ணுக்கு வெளிநாட்டு அல்லது உள்நாட்டு மணமகனும் தேவை. து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4828]

41 வயது, அனுசம் பிரான்சில் தொழில் புரிபவருக்கு தகுந்த பெண் தேவை பிரான்ஸ் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலையில், து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி [4836]

32 வயது, மூலம், செவ்வாய் 2 சைவ உணவு ஆசிரியைக்கு தகுந்த அரச அல்லது சுயதொழில் மணமகன் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில், து. விமலா, இலவச திருமண சேவை யாழ் நாச்சிமார் கோவிலடி. [4834]

35 வயது, பரணி சுவிஸில் பணி புரிபவர், தற்பொழுது யாழ்ப்பாணத்தில் உள்ளார். தகுந்த மணமகள் உடன் தேவை சுவிஸ் அழைத்துச் செல்லலாம். து விமலா, இலவச திருமண சேவை யாழ். நாச்சிமார் கோவிலடி [4835]

## மெல்லிசை கலைஞர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 6

யாழ். குடாநாட்டில் உள்ள மெல்லிசைக் கலைஞர்கள், குழுவினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி அளவில் சோண்டாவிலில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## C. C. A.
### கலை, வர்த்தக கல்லூரி

A/L 92
Day Classes

பொருளியல் —
திரு. உதயன்
★ வரவு-செலவுத்திட்டம்
★ சென்மதிநிலுவை

வர்த்தகம் —
திரு. இரட்ணம்
பகுதி II வினா - விடை

கணக்கியல் –
★ இரட்டைப் பதிவு
★ கம்பனி

ஆரம்பம்:
07 - 05 - 1992
காலை 8-00 மணி
(சி-2271)

## உடுவில் மகளிர் கல்லூரி

93, 94 A/L கலை, வர்த்தக விஞ்ஞான வகுப்புகளுக்கான அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

முதன்முறை க. பொ. த (சா/த) பரீட்சையில் 4 பாடங்களுக்கு மேல் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

—அதிபர்.

[சி-1986]

## திரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட் சோண்டாவில்

A/L 92 வினா - விடை வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

பொருளியல் - உதயன்

பகுதி I- 80 ஆம் ஆண்டு முதல் 91 வரை
பகுதி II- 86 ஆம் ஆண்டு முதல் 91 வரை

ஆரம்பம்: 07 - 05 1992 (வியாழன்)
மாலை 3-00 மணி.

— நிர்வாகி.

[சி-2254]

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

4 MONTHS
சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: 09 - 05 - 1992
8 - 30 மணி

Lectures By- S P. SIVAPATHASUNDARAM
M. A. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதிவாய்ந்த சான்றிதழ்

C.I.M.A. Stage I, I.A.B. (All stages)
விரைவில் ஆரம்பமாகவுள்ளன.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16 3rd. CROSS STREET,
JAFFNA. (சி/2265)

## பாரதிதாசன்

கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

B. A. 1992 டிசம்பர்

★ பொருளியல் ★
S. வரதராஜன்
B. A. (Hons)

★ ஏனைய பாடங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன.

ஆரம்பம்; 09 - 05 - 1992
சனி 3.00 p. m.

[சி-...]

## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
### விசேட பொதுக் கூட்டம்

23 — 5 — 1992

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் 23 - 05 - 1992 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு தி சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். எனவே சகல பொதுச் சபை உறுப்பினர்களும் இக் கூட்டத்திற்குச் சமுகமளித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையில்,
செயலாளர்.

[சி-1987]

## ★ ஆங்கிலம் ★

★ ESOL
சனி/ஞாயிறு வகுப்புகள்
4-30 to 6 00 p.m

★ SPOKEN
சனி/ஞாயிறு வகுப்புகள்
3-00 to 4-30 p.m

ஆரம்பம்: 10 05-1992

விரிவுரைகள்:
கந்தையா நவரேந்திரன்

JAFFNA ENGLISH ACADEMY

9, நக்லா ஒழுங்கை கஸ்தூரியார் வீதி ...குளி,
யாழ்ப்பாணம். [சி-1977]

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

O/L DAY CLASSES
(காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை)

பிரிவு — 5

ஆரம்பம்: 07 - 05 - 1992

★ எமது தனித்துவம் வாய்ந்த வழமையான ஆசிரியர் குழு.
★ கணித, விஞ்ஞான பாடங்கள் நாள் ஒன்றிற்கு இரண்டு மணி நேரம் நடைபெறும்.
★ விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.

[சி-1970]

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

2 ஆவது பிரிவு

O/L 92

★ DAY CLASS ★

எமது வழமையான Super Grade ஆசிரிய குழுவினால்

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — ஜெ. ஆர். சூரி |
| கணிதம் | — இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — பாலா |
| ஆங்கிலம் | — எம். ஏ. ஹரி |
| சமூகக்கல்வி, வர்த்தகம் | — ராஜன் |
| இந்துசமயம் | — தர்மா |

ஆரம்பம்: 07 - 05 - 1992
வியாழன் காலை 8-00 a.m.

[சி-2268]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் நீதிமன்றை எதிர்க்க தமிழக சட்டசபை முடிவு

சென்னை, மே 6
நீதிமன்றில் ஆஜராகும்படி தமிழ் நாடு சட்டசபைச் செயலாளருக்கு புதுடில்லி உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவை அவர் ஏற்கமாட்டார். நீதிமன்றத்தின் முன் ஆஜராக மாட்டார்.

நேற்று மூன்திலம் தமிழக சட்டசபையின் சிறப்புக் கூட்டத்தில்இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது.

இது தொடர்பான தீர்மானம் சட்டசபையில் பலத்த ஆரவாரத்தின் மத்தியில் நிறைவேற்றப்பட்டது.

கோவை மாலைமுரசு ஆசிரியர் தாக்கல் செய்த மனு தொடர்பாக சட்டசபைச் செயலாளரை நேற்று செவ்வாய்க்கிழமை புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி அந்த நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருந்தது தெரிந்ததே.

கோவை மாலைமுரசு ஆசிரியர் சுந்தரம், அதன் செய்தியாளர் சௌந்தரராஜன் ஆகியோரைக் கைது செய்ய தமிழக சபாநாயகர் விடுத்திருக்கும் வாரண்டைத் தடை செய்யும்படி புதுடில்லி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டசபைச் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் விடுத்துள்ள ஆணை, சபையைக் கட்டுப்படுத்தாது என்று சட்டசபை நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

எனினும் சபையின் உரிமைகளை மீறாத வகையில் தேவையான தகவல்களை உயர்நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிப்பது என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

கைது வாரண்டை எதிர் நோக்கும் பத்திரிகையாளர் சபைக்கு வராமல் எழுத்து மூலம் தவறுக்கு வருத்தம் தெரிவித்தால்போதும்; அதனை பரிசீலிக்க சபை தயாராக இருக்கிறது என்றும்—

சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் மன்னிப்புக் கூட சமர்ப்பிக்கத் தேவையில்லை என்றும் நேற்று முன்தினம் சபையில் அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்தார். [உ-எ]

## உ. அ. அதிபர்கள் இடமாற்றம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலராகப் பணியாற்றிய திரு. க. கனகரத்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலராகவும் (உதவி அரச அதிபர்), தெல்லிப்பழைப் பிரதேச செயலராகப் பணிபுரிந்த திரு எஸ். சந்திரராசா சண்டிலிப்பாய் பிரதேச செயலராகவும், முன்பு யாழ்ப்பாணம் பிரதேச செயலராக பணி புரிந்த திரு. ஹெக்டர் யோசேப் ஊர்காவற்றுறை பிரதேச செயலராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். [ஓ-100]


# கோகுலம்

உள்ளூர் மூலப் பொருளிலிருந்து தமிழீழத்தில் தயாரிக்கப்படும், குறைந்த விலையில் சிறந்ததென பாவனையாளர்களால் பாராட்டப்படும் தரமான கால் நடை உணவு.

அதிக ஊட்டச்சத்து மிக்கது
அதிக பால் தரக் கூடியது
அதிக முட்டைகள் பெறப்படுவது

எமது உற்பத்திகள்:-

1. குஞ்சு தீவனம்
2. வளரும் குஞ்சு தீவனம்
3. முட்டைக் கோழித் தீவனம்
4. மாட்டுத் தீவனம்
5. கைக்குத்தரிசி மா

எங்கும் விற்பனையாகின்றன.

## கோகுலம்

கால்நடை உணவு உற்பத்தி நிலையம்,
ஊறணி, வல்வெட்டித்துறை.

[20857]



கலை வண்ணம் மிளிரும்
கவர்ச்சியான
அச்சு வேலைகளை
உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள

★ உதயன் ★

292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-2243]


# வட்டார ரீதியில் ஒத்துழைப்பு குழுக்கள்

யாழ். மாநகராட்சி மன்ற பகுதியில் மேற்கொள்ளப்படும் மராமத்து வேலைகளில் உள்ள குறைபாடுகள், மாற்று நடவடிக்கைகள், அபிவிருத்தி பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வட்டார மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக வட்டார ரீதியில் ஒத்துழைப்புக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.

அவசரகால நடவடிக்கையின்போது ஒத்துழைப்பைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட உள்ள இந்த ஒத்துழைப்புக் குழுக்கள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை 7 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு யாழ். நாவலர் வீதியில் உள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களின் செயலாளர்கள் கலந்துகொள்ள உள்ளனர். (இ)

## குடும்ப அட்டை தாமதக் கட்டணம் அறவிடப்படும்

யாழ். மாவட்ட மக்கள் குடும்பப் பதிவு அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதி நாளை வியாழக் கிழமையாகும்.

அதன் பின்னர் காலதாமதக் கட்டணமாக பணம் செலுத்தியே அட்டைகளைப் பெற்றுக் கொள்ள நேரிடும் என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை தமது கிராம சேவை அலுவலரிடமிருந்து குடும்பப் பதிவு அட்டைகளைப் பூர்த்தி செய்து பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [அ-5]

## நூலகச் சேவை

யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின் நலன் கருதி, யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச்சங்கம், நடமாடும் நூலகச் சேவை ஒன்றை ஆரம்பிக்க உள்ளது. [இ]


# பாரதி

சித்தன்கேணி

பிரிவு - 2

O/L DAY CLASS

ஆரம்பம்:
07 — 05 — 1992

முக்கிய குறிப்பு:
செவ், வியா, சனி, ஞாயிறு ஆகிய 4 நாட்களும் வகுப்பு காலை 8 — 1 மணி நடைபெறுகின்றன.

## புலமைப் பரிசில்

5 ஆம் ஆண்டு
பிரிவு - 2
ஆரம்பம்:
09 — 05 — 1992
3 மணி

ஆசிரியர்:
திரு சிவநேசன்
[இளைப்பாறிய அதிபர்]

[20561]


# கடத்தப்பட்ட 16 தமிழர் குறித்து தகவல் இல்லை

புல்லுமலைப் பகுதியில் உள்ள கோப்பாவெளியில் படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் 16 விவசாயிகள் குறித்து இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எம். பி. ஒருவர் பிரதமரிடம் முறையீடு தெரிவித்தார்.

40 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 21 பேர் விடுதலை செய்யப்பட்டு விட்டனர். மூவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 16 பேரின் நிலைமை இதுவரை தெரியவில்லை என்று பிரதமருக்கு அனுப்பிய தந்தியில் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தியாவட்டுவான் கிராமத்தில் கடத்திச் செல்லப்பட்ட 12 பேர் குறித்தும் தகவல் இல்லை என்றும் அவர் தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார். [ஓ-3]

## விளையாட்டுப் போட்டிகள்

# மாவீரரின் பெயரில் நடத்த கட்டுப்பாடு

நெல்லியடி, மே 6
மாவீரர்களின் பெயரில் தற்போது விளையாட்டுப் போட்டிகள், தட, கள விளையாட்டுகள், நடைபெற்றுவருகின்றன. ஆனால் இவ்வித விளையாட்டுகள் உண்மையில் மாவீரர்களது இலட்சியங்கள், சிந்தனைகளைப் பிரதிபலிப்பதாக அமைவதில்லை. நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளோம். அதனை இன்று எம் மக்கள் மத்தியில் கூற விரும்புகிறேன். இனி மாவீரர்களின் பெயரில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட வீரவேங்கைகள் ஜக்சன், அல்வின் ஞாபகார்த்த உதைபந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்துகையில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பருதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது :-

மரணித்த போராளிகள் பற்றிய தகவல்களை யுத்த முனையில் இருந்து உடனுக்குடன் அவர்களது பெற்றோருக்கு தெரிவிக்கிறோம். அவர்களது புகழுடம்புகள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாவீரர் துயிலும் மண்டபத்தில் எரிக்கப்படுகின்றன. ஒரு காயப்பட்ட போராளியை அல்லது மரணித்த போராளியின் புகழுடம்பை மீட்கும் போது பல இழப்புகளை எதிர்நோக்க வேண்டியிருந்தாலும் எமது முயற்சியில் நாம் பின்நிற்பதில்லை.

இவ்விதமான மாவீரர்களின் தியாகத்தில்தான் எமது வாழ்வு தங்கியுள்ளது. இவ்விதம் மாவீரர்கள் உயிரை அர்ப்பணிக்கும்போது அவர்களது சிந்தனைகள் நினைவுகள் சக போராளிகளாலும், மக்களாலும் நிறைவேற்றப்படுகின்றன.

அவர்களது சிந்தனை,
[2 ஆம் பக்கம் பார்க்க]


# புதிய உயர் கல்லூரி

[New College of High Studies]
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

O/L
DAY CLASSES
பிரிவு II
ஆரம்பம்:
07-05-1992
[9 மணி]

O/L சனி - ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

SPOKEN ENGLISH
By: BRITTO
புதிய பிரிவு ஆரம்பம்:
09-05-1992
[9 மணி]

[சி-2214]


# 7 தமிழர்களுக்கு பதவி உயர்வு

சுங்கத்திணைக்களத்தில் ஏழு உதவி சுங்க பணிப்பாளர்கள் பிரதிப் பணிப்பாளர்களாகவும் 12 சுங்க அத்தியட்சகர்கள் உதவிப்பணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களில் ஏழு தமிழர்களும் அடங்குகின்றனர்.

கே. பொன்னம்பலம், எஸ். இராமநாதன், எஸ். பத்மநாதன் ஆகியோர் பிரதி சுங்கப் பணிப்பாளர்களாகவும், ஏ. ஜோசப், ரி. கணநாதலிங்கம், பி. கந்தசாமி ஏ. ஆனந்தலிங்கம் ஆகியோர் இரேஷ்ட உதவிப் பணிப்பாளர்களாகவும் பதவி உயர்வு பெற்றுள்ளனர். [ஓ-3]

## தோ. தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஊவா மாகாணம் ஹாலி-எல சென். ஜேம்ஸ் தோட்டத் தொழிலாளர்கள் 15 கோரிக்கைகளை முன் வைத்து கடந்த 29 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

சுமார் ஆயிரம் தொழிலாளர் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

## அஞ்சல் தொலை தொடர்பு:

# ஓய்வூதிய கொடுப்பனவில் குறைபாடு நீங்க வேண்டும்

## வருடாந்த மாநாட்டில் கோரிக்கை

அரசு காலத்துக்குக் காலம் ஓய்வூதியக் கொடுப்பனவு முறைகளில் மாற்றம் செய்யும்போது புதிதாக ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படும் நன்மைகள் ஏற்கனவே ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் இந்த வித்தியாசம் ஆயிரம் ரூபா வரை இருக்கிறது இந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

அஞ்சல் தொலை தொடர்பு இளைப்பாறிய ஊழியர் நலன் புரிக் கழகத்தின் ஆறாவது வருடாந்த மாநாடு அண்மையில் யாழ். நகரில் நடைபெற்றபோது அதன் தலைவர் திரு. ஏ. சி. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தற்போது அரச ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்து 3 மாதங்களுக்குள் சிபார்சுகளைத் தெரிவிக்குமாறு சம்பள நிர்ணய ஆணைக்குழுவுக்கு பணிப்புரை செய்யப்பட்டுள்ளது. இதன் பின்னர் ஓய்வூதியம் பற்றியும் மீளாய்வு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது இவ்விடயம் அரசின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது— என்றார்.

# மன்னார் ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் பற்றாக்குறை

## அகதிகள் பெரும் பாதிப்பு

மன்னார் ஆதார வைத்தியசாலை டாக்டர்கள் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளது.

1991 இல் டாக்டர் பட்டம் பெற்ற 472 பேரில் ஒருவர் மட்டுமே மன்னார் ஆஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்டார். பெண் டாக்டரான அவரும் மன்னாரில் இன்னும் கடமை ஏற்கவில்லை.

இதே வேளை இந்த ஆண்டு டாக்டர் பயிற்சியை முடித்துக்கொண்ட 393 பேரிலும் ஒருவர் கூட மன்னார் வைத்தியசாலைக்கு நியமிக்கப்படவில்லை.

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் மன்னார் திரும்பியுள்ளனர். அவர்களின் வைத்திய வசதிகளைக் கவனிக்க முடியாத பாரதூரமான நிலை மன்னார வைத்தியசாலையில் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-எ)


# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு

## திருமதி அன்னம்மா செல்லத்துரை

((((★))))

அமரத்துவம் எய்திய எமது குடும்பத் தலைவி
திருமதி அன்னம்மா செல்லத்துரை

அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்வதோடு, அந்தியேட்டி வீட்டுக் கிரியை 07-05-92 வியாழக்கிழமை முற்பகல் 10. 00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் மேற்படி நிகழ்ச்சியில் உற்றார். உறவினர். நண்பர்கள், அன்பர்கள் கலந்து கொண்டு எங்கள் தலைவியின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.
[20855]

செ. வேணுகோபால்
செ. சிதம்பரநாதன்
[நாதஸ்வர வித்துவான்]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### முருகேசு சண்முகரெட்ணம்

(தயா)

[பங்காளர் சுபமாலா மோட்டேர்ஸ்]

| கன்னித் தமிழ் மண்ணில்: | காலகத்து காரிருளில்: |
|---|---|
| 03 — 06 — 1956 | 19 — 05 — 1988 |

திதி: 06 — 05 — 1992

கார் இருளில் கபவர் எம்
கண்ணிரண்டைப் பறித்தவரே
கண் இழந்த பின்னருமே
காத்திருக்கிறோம் உன் வரவிற்காக.

இதய மலர்களால் நினைவு கூரும்;

மனைவி, பிள்ளைகள்,
பெற்றோர், சகோதரர்கள்,
சகோதரிகள்.

249A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[20849]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### வேலுப்பிள்ளை சின்னத்துரை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 — 06 — 1905 | 17 — 04 — 1991 |

திதி: 06 — 05 — 1992

அன்புமிகு துணைவனாய்,
பாசமிகு தந்தையாய்,
பாரினில் எல்லோருக்கும் இனியவராய்,
வாழ்ந்து இறைவனடி சேர்ந்த - தங்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் -
பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''அம்பிகை வாசா'',
ஆஸ்பத்திரி முன்பாக,
சாவகச்சேரி.

[20847]

---

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி

## G.A.Q பொருளியல்

மாதிரி வினா விடை வகுப்புகள்

ஆசிரியர்: திரு. S. வரதராஜன் B. A (Hons)

ஆரம்பம்: 06-05-92 புதன் 3 மணி

**தொடர் கல்வி நிறுவனம்,**
**உடுவில் மகளிர் கல்லூரி, உடுவில்.**

(சி/1985)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 22 — 05 — 1937 |  | 06 — 05 — 1990 |

அமரர்

### நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

(Formerly Deputy Director, Dept-of Buildings)

அன்பின் இருப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் ஒளிவிளக்காய்,
பதவியில் மேன்மையாய்,
இல்லறம் என்னும் நல்லறத்தை,
இனிதே நடத்தி திடீரென மறைந்த,
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய,
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்;
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

''ஜெயபதி'',
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

[4689]

---

## கண்ணீர் அஞ்சலி

| | |
|---|---|
| பிறப்பு: 10 — 01 — 1973 |  |
| இறப்பு 01 — 05 — 1992 | |

### செல்வி செல்வரத்தினம் ரோகினி

மின்னாமல், இடியாமல், மேகம் கறுக்காமல், பொங்கியெழுந்தோர புயல் மழையாய் ஆளை போல் சீராக்க செல்வரத்தினம் ரோகினி பார் விட்டு மேலுலகம் பறந்தோடிப் போயினளோ!

இவ்வுலகம் விட்டகன்று சென்றவரை நெஞ்சல் எளிதே வாழ்வெல்லாம் எண்ணிட்டே, அன்னவளுக்கு கண்ணீர் மழையாலே அஞ்சலியும் செய்திடுவோம்.

- நண்பர்கள்.

நாவற்குழி மேற்கு,
கைதடி.

[20848]

---

## London Accountancy Classes

**(Nov. — Dec. 1992)**

C. I. M. A. - Stage I
(G. C. E. A/L 2C'S உடன் நீங்கள் Management Accountant ஆக உகந்த பயிற்சி நெறி)

A. A. T. (Inter)
(G. C. E. A/L 2 சித்தியுடன் அல்லது 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு C.I.M.A. பயிற்சி நெறியில் Stage - Iக்கு விளக்கமளிக்கப்படும்.)

I. A B. - Foundation
- Inter
(யாழ். நகரிலேயே Book-Keeper ஆவதற்கு உகந்த பயிற்சி நெறி)

வகுப்புகள் 09 — 05 — 1992

மேலதிக விவரங்களுக்கு:

**North Ceylon Technical Institute,**
14, St. Peter's Lane, Jaffna.

[சி-1984]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

### A/L கலை, வர்த்தகம்

94 பிரிவு - 2
ஆரம்பம்: 09 - 05 - 1992
காலை 8 மணி

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் |
| வர்த்தகம் | — திரு. தேவா |
| கணக்கியல் | — திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | — திரு. சுப்பிரமணியம் |
| தமிழ் | — திரு. குழந்தை |
| இந்து நாகரிகம் / இந்து சமயம் | — திரு. காரைசுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — திரு. குணராசா |
| அரசியல் | — திரு. ஜெயகாந்தன் |
| வரலாறு | — திரு. சிறீதரன் |

[சி-2260]

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

### A/L கலை, வர்த்தகம்

92 வினா-விடை வகுப்புக்கள்
DAY CLASSES

ஆரம்பம்: 07 - 05 - 1992

| | | |
|---|---|---|
| பொருளியல் | — திரு. கலாகரன் | [8-00 — 9-30] |
| வர்த்தகம் | — திரு. இரத்தினம் | [9-30 — 11-00] |
| கணக்கியல் | — திரு. S. K. பிரபாகரன் | [11-00 — 12-30] |
| அளவையியல் | — திரு. A. பிரபாகரன் | [12-30 — 2-00] |

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

கணக்கியல் **S. K. பிரபாகரன்**
SAT., SUN.

92 வினா-விடை வகுப்புக்கள்
[1-30 p. m. — 3-00 p. m.]

93 புதிய பிரிவுகள்
[3-00 p. m. — 4-00 p. m.]

94 புதிய பிரிவுகள்
[4-00 p. m. — 5-00 p. m.]

ஆரம்பமாகிவிட்டன.

[சி-2264]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### காசுப் பயிருக்கு கட்டுப்பாடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இனிமேல் வருடத்தில் நான்கு மாதங்களுக்கு மட்டுமே விவசாயிகளை புகையிலைச் செய்கை மேற்கொள்ள அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த முடிவு, விவசாயிகளில் ஒரு சாரார் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் குடாநாட்டின் தேவைகளையும், பொருளாதார வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு எடுக்கப்பட்ட இந்த முடிவு மிகவும் வரவேற்கத் தக்கதாகும்.

யாழ்ப்பாணப் பகுதியில் நீண்ட நெடுங்காலமாகவே, புகையிலை பிரதானமான பயிராக இருந்து வருகிறது. சில பிரதேசங்களில் வருடத்தில் ஒன்பது, பத்து மாதங்களுக்கு விவசாயிகள் அதனையே பயிரிட்டு வருவதும் உண்டு.

புகையிலை காசுப் பயிர். மலேசியா, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட காலத்தில் இருந்தே, அது யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. அதன் காரணமாக, புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கப்பட்டதால், அது குடாநாட்டின் பாரம்பரிய பயிராகவும் விளங்கிற்று.

ஆனால் இப்போது நிலைமை வேறு; காலமும் வேறு. தமிழர் பிரதேசங்களில் சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது. அரசியல் சுதந்திரத்துக்கு அதனை அடைவதற்கு சுயசார்புப் பொருளாதாரம் மிகப் பிரதானமானதும், அவசரமானதுமாகும்.

அடுத்தவன் கையை நம்பி இருக்காமல், தமிழ் மக்களின் உணவுக்கும் ஏனைய தேவைகளுக்கும் சொந்த மண்ணையும், சொந்தக் கைகளையும் நம்பியிருக்கும் காலத்தை உருவாக்க வேண்டியுள்ளது. அது மிகவும் அத்தியாவசியமான ஒன்று.

அதன் பொருட்டு உள்ளூர் தேவைகளை நிறைவேற்றக் கூடிய உற்பத்திக்குறைக்கே முதலிடமும், முழு இடமும் அளிக்க வேண்டிய கட்டாயம் தோன்றியுள்ளது. மக்களில் பெரும்பாலானவர்கள் உணவு இன்றி பட்டினி கிடக்க, ஒரு சிலர் பணம் சம்பாதிக்க அல்லது அதிக வருமானம் பெறுவதற்காகக் காசுப் பயிரை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருக்க அனுமதிக்க முடியாது. அனுமதிக்கக் கூடாது.

புகையிலையைப் பொறுத்தமட்டில் அது வெளியிலிருந்து பணத்தைக் கொண்டு வரும் என்ற ஒரேயொரு காரணத்துக்காக, அதனால் விளையக் கூடிய பல பாதகங்களைக் காணாமல் இருக்க முடியாது. மக்களின் முதற் தேவையான உணவுக்குத் தானியங்களும், உப உணவுப் பயிர்களும், மரக்கறிகளும் தேவையாக இருக்கும் போது, அவற்றில் சுயதேவைப் பூர்த்தி நிலை அடையாத வரை புகையிலை போன்ற காசுப் பயிர்களைச் செய்கை பண்ணுவதைக் கட்டுப்படுத்தாவிடில் தமிழர் தேச நலனுக்குக் குந்தகம் ஏற்படும்.

எனவே, புகையிலைப் பயிர்ச்செய்கையில் அளவுக்கு அதிகமான ஈடுபாடு காட்டும் விவசாயிகள் காலத்தை உணர்ந்து, மக்களுக்கு உணவளிக்கும் மாற்றுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டும். இது அவர்களின் கடமை.

தமிழ் மக்களின் பாதுகாப்புக்கென

# சர்வதேச சமாதானக்குழுவின் அலுவலகம் காத்தான்குடியில்

மட்டக்களப்பு, மே 6

மீளக் குடியேறும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்காக 'சர்வதேச சமாதானக் குழு' அலுவலகம் ஒன்றை காத்தான்குடியில் திறப்பதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி, மஞ்சந்தொடுவாய் பகுதிகளில் மீளக் குடியேறும் தமிழர்களின் பாதுகாப்புக்கு இந்த சர்வதேசக் குழு பொறுப்பாக இருக்கும்.

காத்தான்குடிக்கு கடந்த வாரம் விஜயம் செய்த மேற்படி குழுவின் இரண்டு பிரதிநிதிகள், அங்குள்ள தமிழ் அகதிகளையும் முஸ்லிம் முக்கியஸ்தர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இவர்கள் தமது தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு, விரைவில் காத்தான்குடியில் புதிய அலுவலகத்தைத் திறக்கவுள்ளனர்.

இதேவேளை—

மஞ்சந்தொடுவாயில் கடந்த வியாழக்கிழமை பொலிஸ் நிலையம் ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது [ஒ-3]

## தப்பிய இரு தமிழ் இளைஞர் மீண்டும் கைதாகினர்

திவிரவாத நடவடிக்கைகள் தொடர்பாகக் கைதாகி காவலில் வைக்கப்பட்டிருந்தபோது தப்பிச் சென்ற இரண்டு மலையகத் தமிழ் இளைஞர்களை மாத்தறைப் பொலிஸார் மீண்டும் கைது செய்தனர்.

நிசித்திகலையைச் சேர்ந்த வேலுசாமி, இரத்தினபுரியைச் சேர்ந்த ரெப்பினல் ஆகியோரே அவர்கள்.

இவர்கள் இருவரும் முன்னர் வெலிக்கடைச் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர்.

இரத்தினபுரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்காக இவர்களை சிறை அதிகாரிகள் கூட்டிச் சென்றபோது இவர்கள் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது [ஒ-எ]

## உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை 78

பொலன்னறுவ மாவட்டத்தில் முத்துகல் மற்றும் கரப்பொலை ஆகிய தமிழ்க் கிராமங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்த தமிழரின் எண்ணிக்கை 78 என அறிவிக்கப்படுகிறது.

முன்னர் ஆலஞ்சிப்பொத்தானை என்னும் இடத்தில் இடம்பெற்ற தாக்குதலில் 58 முஸ்லிம்கள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-எ)

# மீட்பு நிதி கடன் மீளளிப்பு

யாழ்ப்பாணம், மே 6

தமிழீழ மீட்பு நிதிக்கு கடனளித்தோரில் மற்றும் ஒரு தொகுதியினரான — 536 பேருக்கு — எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கடன் மீளளிப்புச் செய்யப்படும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி ஏற்கனவே அறிவித்திருந்தார் என்பது தெரிந்ததே.

கடன் மீளளிப்பை பெறவிருக்கும் 536 பேர்களினதும் தொடர்பு இலக்கங்கள் — பிரிவு ரீதியாக கீழே தரப்பட்டுள்ளன:-

### யாழ்ப்பாணம் (யா/யா)

| | | | |
|---|---|---|---|
| 537 | 1370 | 439 | 1828 |
| 3611 | 661 | 1204 | 3491 |
| 129 | 135 | 782 | 785 |
| 920 | 3216 | 72 | 111 |
| 141 | 4173 | 148 | 945 |
| 2949 | 83 | 879 | 4014 |
| 59 | 103 | 178 | 406 |
| 544 | 665 | 1248 | 3417 |
| 4141 | 4318 | | |
| 91 | 167 | 195 | 334 |
| 458 | 632 | 940 | 1460 |
| 1959 | 4687 | | |

### நல்லூர் (யா/ந)

| | | | |
|---|---|---|---|
| 1281 | 3164 | 4548 | 4620 |
| 990 | 3268 | 4605 | 4851 |
| 171 | 1014 | 1387 | 2459 |
| 2844 | 3984 | 581 | 1948 |
| 4874 | 41 | 139 | 595 |
| 4725 | 391 | 774 | 1593 |
| 2006 | 3359 | 4795 | 5032 |
| 5814 | 5819 | 87 | 1245 |
| 1448 | 5536 | 387 | 3957 |
| 906 | 3348 | 4145 | 2528 |
| 4200 | | | |
| 21 | 25 | 123 | 436 |
| 490 | 506 | 2397 | 3027 |
| 4209 | 4731 | | |
| 262 | 452 | 861 | 1299 |
| 2430 | 2957 | 3447 | 3761 |
| 5605 | 5634 | | |

### கோப்பாய் (யா/கோ)

| | | | |
|---|---|---|---|
| 587 | 3449 | 784 | 2649 |
| 601 | 1994 | 538 | 3191 |
| 375 | 486 | 1107 | 3981 |
| 106 | 630 | 2970 | 3955 |
| 954 | 5342 | 209 | 254 |
| 310 | 902 | 2736 | 3329 |
| 1671 | 4247 | 5492 | 2897 |
| 3238 | 508 | 4362 | |
| 16 | 242 | 320 | 541 |
| 2966 | 3617 | 3795 | 5674 |
| 123 | 370 | 592 | 715 |
| 1572 | 2873 | 3145 | 6315 |

### உடுவில் (யா/உ)

| | | | |
|---|---|---|---|
| 2104 | 639 | 650 | 2089 |
| 509 | 2445 | 1930 | 74 |
| 2153 | 172 | 92 | 2435 |
| 2830 | 514 | 625 | 170 |
| 1312 | 43 | 2361 | 2459 |
| 26 | | | |
| 01 | 501 | 659 | 783 |
| 954 | | | |
| 11 | 47 | 91 | 175 |
| 3026 | | | |

### மானிப்பாய் (யா/மா)

| | | | |
|---|---|---|---|
| 145 | 373 | 207 | 257 |
| 354 | 98 | 391 | 1086 |
| 1808 | 1921 | [illegible] | 1127 |
| 1645 | 337 | 1612 | 3242 |
| 465 | 3169 | 278 | 535 |
| 3076 | 401 | 705 | 485 |
| 2391 | 3472 | 349 | 268 |
| 2105 | 751 | | |
| 749 | 1339 | 2834 | 3400 |
| 3667 | 3707 | | |
| 11 | 119 | 479 | 1702 |
| 3292 | 3714 | | |

### சங்கானை (யா/ச)

| | | | |
|---|---|---|---|
| 26 | 731 | 1395 | 2541 |
| 221 | 3330 | 1521 | 1861 |
| 68 | 2951 | 4211 | 282 |
| 4001 | 1520 | 2133 | 4209 |
| 753 | 805 | 2532 | 4159 |
| 810 | 2095 | 1288 | 4015 |
| 954 | 4250 | 136 | 2142 |
| 53 | 93 | 94 | 251 |
| 563 | 2723 | 3189 | 3722 |
| 4635 | | | |
| 15 | 168 | 686 | 1660 |
| 2003 | 3184 | 3769 | 4115 |
| 4222 | | | |

### தெல்லிப்பழை [யா/தெ]

| | | | |
|---|---|---|---|
| 832 | 46 | 72 | 466 |
| 2092 | 632 | 930 | 990 |
| 2127 | 35 | 991 | 2695 |
| 508 | 922 | 940 | 2598 |
| 4174 | | | |
| 63 | 139 | 288 | 371 |
| 516 | 579 | 602 | 1681 |
| 171 | 301 | 341 | 501 |
| 913 | 1322 | 2562 | 4138 |

### கரவெட்டி (யா/க)

| | | | |
|---|---|---|---|
| 417 | 922 | 959 | 326 |
| 438 | 990 | 673 | 2689 |
| 1012 | 1285 | 4116 | 912 |
| 921 | 3649 | 1510 | 4904 |
| 139 | 208 | 4712 | 663 |
| 813 | 4164 | 381 | 4026 |
| 4727 | 301 | 914 | 4310 |
| 20 | 192 | 274 | 477 |
| 542 | 672 | 748 | 829 |
| 834 | 2345 | | |
| 27 | 128 | 134 | 874 |
| 929 | 2102 | 2295 | 2697 |
| 3263 | 4190 | | |

### பருத்தித்துறை (யா/ப)

| | | | |
|---|---|---|---|
| 20 | 135 | 814 | 943 |
| 1536 | 1573 | 116 | 1590 |
| 3869 | 168 | 807 | 1223 |
| [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
| 768 | 867 | 4190 | 209 |
| 577 | 836 | 3574 | 693 |
| 1226 | 210 | 1923 | 1561 |
| 2048 | 4312 | 89 | 283 |
| 480 | 918 | 2966 | 3782 |
| 4230 | 125 | | |
| 41 | 57 | 109 | 529 |
| 651 | 2311 | 3058 | 3157 |
| 32 | 376 | 384 | 729 |
| 804 | 835 | 1209 | 1257 |

### வடமராட்சி கிழக்கு (யா/வ/கி)

| | | | |
|---|---|---|---|
| 338 | 880 | | |
| 787 | 779 | 717 | 40 |
| 105 | 834 | | |

### காரைநகர் (யா/கா)

| | | | |
|---|---|---|---|
| 13 | | | |
| 356 | 715 | | |
| 79 | 714 | | |

### வேலணை (யா/வே)

| | | | |
|---|---|---|---|
| 54 | 587 | 189 | 03 |
| 954 | 1128 | 04 | 53 |
| 222 | 458 | | |
| 176 | 218 | 1284 | 1771 |
| 1887 | | | |
| 87 | 312 | 829 | 1503 |
| 1981 | | | |

### சாவகச்சேரி (யா/சா)

| | | | |
|---|---|---|---|
| 3264 | 965 | 2290 | 02 |
| 6303 | 558 | 393 | 2679 |
| 3964 | 5754 | 6976 | 4517 |
| 157 | 708 | 1768 | |
| 100 | 353 | 362 | 569 |
| 816 | 934 | 1023 | 2622 |
| 4943 | 5409 | 6073 | 6692 |
| 7056 | | | |
| 66 | 382 | 614 | 912 |
| 3156 | 3426 | 3899 | 4311 |
| 4681 | 5147 | 5165 | 6241 |
| 6409 | | | |

### வெளியகல்வு (யா/வெ)

| | | | |
|---|---|---|---|
| 20 | 185 | 504 | 645 |
| 727 | 508 | 622 | 648 |
| 680 | 792 | 32 | 614 |
| 967 | 1533 | 08 | 538 |
| 546 | 847 | 908 | 84 |
| 471 | 864 | 1610 | 117 |
| 773 | 944 | 53 | 555 |
| 1620 | 178 | 638 | 765 |
| 966 | 59 | 200 | 643 |
| 718 | 289 | 812 | 1368 |
| 109 | 922 | 928 | 719 |
| 905 | 1031 | | |
| 41 | 705 | 903 | |
| 794 | 837 | 1037 | |

### இளி/பச்சிலைப்பள்ளி (இ/ப)

| | | | |
|---|---|---|---|
| 511 | | | |
| [illegible] | | | |

## 3,22,000 டொலருக்கு கொலம்பஸ் கடிதம் ஏலம்

வாஷிங்டன், மே 6

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கிறிஸ்தோபர் கொலம்பஸ் 499 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கடிதம் ஒன்று 3 லட்சத்து 22 ஆயிரம் டொலருக்கு கடந்த மார்ச் 30 ஆம் திகதி ஏலம் போனது.

பெயரை வெளியிட விரும்பாத அமெரிக்கர் ஒருவர், பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் நடந்த ஏலம் ஒன்றில் அக் கடிதத்தை வாங்கினார்.

ஆறு பக்கங்கள் கொண்ட அக் கடிதத்தில் 15-02-1493 என்று திகதியிடப்பட்டுள்ளது.

புதிய உலகைக் கண்டு பிடித்த பின்னர் கிறிஸ்தோபர் கொலம்பஸ் சாந்த மரியா கப்பலில் திரும்பிக் கொண்டிருந்தார். அப்போதே அவர் அக் கடிதத்தை எழுதினார் என்று 'நியூஸ் வீக்' சஞ்சிகை தெரிவித்திருக்கிறது. [இ-எ]

சூரிச், ஜெனிவா நகரங்களில்

## புலிகளின் பேரணிகளில் ஏராளமான தமிழர்கள்!

ஜெனிவா, மே 6

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சுவிட்சர்லாந்து கிளை மே தினத்தை சூரிச்சிலும், ஜெனிவாவிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடின.

இவ்விரு நகரங்களிலும் இரு வேறு பேரணிகள் நடத்தப்பட்டன.

சூரிச்சில் நடந்த பேரணியில் பெண்கள் உட்பட பெருமளவு எண்ணிக்கையான தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணிகளில் துருக்கிய, ஸ்பானிய, இத்தாலிய, லெபனானிய அமைப்புகள் மற்றும் சுவிஸ் தொழிற் சங்கங்கள் பலவும் கலந்து கொண்டன என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சுவிஸ் கிளையைச் சேர்ந்த திரு. த. ஜெயபாலன் தெரிவித்தார்.

''சர்வதேச சமூகமே தமிழீழ மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைகளை அங்கீகரி'', ''வடபகுதிக்கான பொருளாதாரத் தடையை நீக்கு'', ''தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் பிரபாகரன்'' என்ற கோஷங்கள் ஊர்வலங்களில் எழுப்பப்பட்டன.

ஊர்வலங்களின் முடிவில் பொதுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. [ஒ-3]

## தமிழிசை விழாவில் இன்று

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் அமைந்துள்ள அரங்கில் நடத்தி வரும் தமிழிசை விழா இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று புதன்கிழமை நடைபெறுகின்றன.

இன்றைய நிகழ்ச்சி விவரம் வருமாறு:

மங்கள இசை

[மாலை 5-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை]

நாதஸ்வரம்: திருவாளர்கள் கே. சந்தானகிருஷ்ணன், வி. பத்மநாதன், சிவசுப்பிரமணியம், எம். செல்வக்குமார். தவில்: திருவாளர்கள் எம். முத்துக்குட்டி, என். குஞ்சிதபாதம், எம். யசோதரன், எம். மூர்த்தி.

பாட்டு

[6-00 மணி தொடக்கம் 7-00 மணி வரை]

செல்விகள் யசோதா செல்வராசா — பாட்டு, பாக்கியலட்சுமி நடராசா — வயலின், எஸ். துரைராசா — மிருதங்கம்.

பாட்டு

[7-00 மணி தொடக்கம் 8-00 மணி வரை]

செல்வி சியாமளா ஜெயசுந்தரம் — பாட்டு, செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் — வயலின், திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்

சிறப்பு விருந்தினர் உரை

[8-00 மணி தொடக்கம் 8-30 மணி வரை]

திரு. தமிழ்ச்செல்வன் (சிறப்புத் தளபதி, யாழ். மாவட்டம்), திரு. யோகரத்தினம் யோகி (செயலதிபர், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி), திரு. செ. தமிழேந்தி (நிதிப்பொறுப்பாளர், தமிழீழ விடுதலைப் புலிகள்), பேராசிரியர் கா. சிவத்தம்பி (தலைவர், நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்)

பாட்டு

[8-30 மணி தொடக்கம் 9-30 மணி வரை]

திருவாளர்கள் பொன் சுந்தரலிங்கம் — பாட்டு, ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின், எஸ். மகேந்திரன் — மிருதங்கம், பா. சிதம்பரநாதன் — கெஞ்சிரா.

கெஞ்சிற் கச்சேரி

[9-30 மணி தொடக்கம் 10-30 மணி வரை]

திருவாளர்கள் என். கே. பத்மநாதன் — நாதஸ்வரம், ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின், கே. கண்ணதாசன் — மிருதங்கம், ரி. உதயசங்கர் — தவில், எஸ். நாகராஜன் — கெஞ்சிரா, எஸ். ராஜா — முகர்சிங் (இ)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், மே 6

மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி அலுவலக திறப்பு விழா இன்று புதன் காலை 11-00 மணிக்கு யாழ். மணிக்கூண்டு கோபுர வீதியில் இடம் பெறும்.

பிரதி அஞ்சல் மா அதிபதியாக திரு. எஸ். எம். சேதுகாவலர் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

## உற்சவம்

யாழ்ப்பாணம், மே 6

சங்கானை வெல்லில் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் கொடியேற்றம் இன்று புதன்கிழமை இடம்பெறுகிறது இம் மாதம் 16 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் மஹோற்சவம் நிறைவு பெறும். (இ)

## கும்பழாவளை பிள்ளையார் மகோற்சவம்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் இன்று புதன்கிழமை காலை 11-30 க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும்.

தினமும் இரவு 8-00 மணி முதல் 9-00 மணி வரை கம்பராமாயண தொடர் விரிவுரைகள் நடைபெறும். கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் இதனை நிகழ்த்துவார். (இ-89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சின்னத்துரை

[இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர், சாவகச்சேரி]

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், குரும்பசிட்டியை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சின்னத்துரை காலமானார்.

அன்னார் பராசக்தியின் அன்புக் கணவரும், உமா நந்தினி [யாழ். பல்கலைக் கழகம், முகாமைத்துவ மாணவி], பிருந்தாகரன் [டென்மார்க்] ஆகியோரின் அருமைத் தந்தையும், ஏழாலை - சிவஞானம், அப்புத்துரை [இளைப்பாறிய ஆசிரியர்], நாகம்மா, அன்னலட்சுமி, சண்முகரத்தினம், காலஞ்சென்ற செல்லம்மா, மகாலிங்கம் [சவுதி அரேபியா], வசந்தி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [06-05-92] புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மல்லாகத்தில் நடைபெறும்.

புகையிரத நிலைய வீதி,
மல்லாகம்.
[20867]

தகவல்:
செ. சிவஞானம்
[சகோதரர்]

---

### அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை

[சீனியர் மனுவேற்பிள்ளை]

கரம்பன்கிழக்கு ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான மரியாம்பிள்ளை 5-5-92 இல் காலமாகிவிட்டார். அன்னார் திருமதி செல்லத்தின் அன்புக் கணவரும், சில்வெஸ்ரர் [ஜேர்மனி], ஸ்கொலஸ்ரிக்கா, மேரி அகும்தா [கலா] [மக்கள் வங்கி, ஊர்காவற்றுறை] ஆகியோரின் அன்பு தந்தையும், பபி, சேவியர் ஆகியோரின் மாமனாரும், அனிற்றா, டிலானா, டயனா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடகத்திற்காக இன்று புதன்கிழமை பி. ப. 3-00 மணிக்கு சஞ்சுவான் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலிப் பூசையின் பின் யாழ். புனித கொஞ்சேஞ்சி மதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மேரி அகும்தா மரியாம்பிள்ளை
[கலா - மகள்]

இல 832 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[20862]

---

### திருமதி சின்னத்துரை நேசம்மா

திருமதி நேசம்மா 5-5-92இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், மனோன்மணி, வேவி, நவமணி, ஞானபுஸ்டம், றோஸ்மலர், அருமைத்துரை, அரியரெட்ணம், கிளி ஆகியோரின் அன்புத் தாயாரும், எலிசம்பிள்ளை, நடராசா, G. M. செபஸ்ரியாம்பிள்ளை, யோசேப், மேரி அக்னெஸ், கிருபாராணி, பற்றிக், காலஞ்சென்ற துரைராசா, அருள்ராசா ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 70/2, பழைய பூங்கா வீதி, சொய்யாத்தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று [6-5-92] பிற்பகல் 4 மணியளவில் நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பிரான்சிஸ் அருமைத்துரை
[மகன்]

70/2, பழைய பூங்கா வீதி,
சொய்யாத் தோட்டம்,
யாழ்ப்பாணம்.
[20864]

---

### திருமதி விக்டோரியா யோசப்

வவுனியாவைச் சேர்ந்த திருமதி விக்டோரியா யோசப் [இரத்தினம்] காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற என். பி. யோசப் அவர்களின் அன்பு மனைவியும், வண. பிதா ஜே. பி. தேவராஜா [மன்னார்] பவளம், காலஞ்சென்ற வில்லவராஜா [காலால்டிபரிசோதகர்], ஆனந்தராஜா [G S O], சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு தாயாரும் றொபேட், யோகா, தவம், யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று வவுனியாவில் நடைபெறும். இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இன்று மாலை 5-00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தகவல்:
திருமதி யோகா வில்லவராஜா
[மருமகள்]

150, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.
[20856]

---

### திருமதி சுப்பிரமணியம் மீனாட்சி

காரைநகர் மருதடி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் மீனாட்சி 5-5-92 நேற்றுக் காலமானார். இவர் கந்தப்பு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், நடராஜமணியம், பேரின்பமணியம், புண்ணியமணியம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேஸ்வரி, மகேஸ்வரி, தியாகலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், V. M. சண்முகம், V. M. பரமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6-5-92) நண்பகல் 12 மணியளவில் நவாலி கொத்துக்கட்டி மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
சு. புண்ணியமணியம் (மகன்)

சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலடி,
நவாலி தெற்கு.
(20868)

---

## பேராசிரியர் சிவத்தம்பிக்கு ஞாயிறன்று மணிவிழா

யாழ்ப்பாணம், மே 6

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் மணிவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நிகழ்ச்சியில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், வண. ஜி. ஏ. பிரான்ஸிஸ் யோசேப் அடிகளார், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தொடக்கவுரை நிகழ்த்துவார். தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார்.

மணிவிழாவில் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. எஸ். ரி. அரசு, திரு. டொமினிக் ஜீவா, கலாநிதி எஸ். ஜெயநேசன், திரு. சு. டிவகலாலா, கவிஞர் புதுவை இரத்தினதுரை, திரு இ. ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரைகள் நிகழ்த்துவர். (உ)

### மணி விழா

யாழ்ப்பாணம் மே 6

குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவரும், வடமாநில சித்திர பிரதிக் கல்விப் பணிப்பாளருமான கலாகேசரி ஆ. தம்பித்துரையின் மணிவிழா தொடர்பான நிகழ்ச்சிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் சம்பன் கோட்டத்தில நடைபெறும். கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை இந்த நிகழ்ச்சிக்கு தலைமை வகிப்பார்.

மணிவிழாவின் ஓர் அம்சமாக இன்று புதன்கிழமை நண்பகல் 3 30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் சன்மார்க்க நுண்கலை மன்றத்தின் சித்திர சிற்பப் பிரிவு அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படுகிறது (இ)

---

### மீன் வாங்கும்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திரன் தகவல் வெளியிட்டார்.

மீன் உண்பவர்கள் இவ் விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்றும்—

மீன் விற்பனையாளர்களும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

(உ-5)

---

### அமைச்சர்...

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

உண்மையான குற்றவாளிகள் தப்பிவிடக் கூடும்

தமிழ் நாட்டில் உள்ள பெரும்பாலான அரசியல் கட்சிகளும் தமிழக அரசும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ய வேண்டும் என்று கோரிவருகின்றன. ராஜீவ் காந்தி அமரரான இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்பதாக விடுதலைப் புலிகள் அமைப்பை உடனடியாகத் தடைசெய்யும் படி பிரதமர் நரசிம்மராவைக் கேட்டுக் கொள்கின்றேன்.

—இப்படி அவர் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

(ஒ-எ)

---

### தமிழீழப்..

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

தேவையையும் உணர்ந்தே இந்த ஆய்வு நிறுவனத்தை அமைக்க முடிவு செய்யப்பட்டதாக விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணி அறிவித்துள்ளது

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும் குறித்து மகளிர் முன்னணி விடுத்துள்ள அறிக்கை பின்னர் உதயனில் வெளியாகும்.

(உ)

---

### மாவீரனின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுகள் நிறைவேற மக்கள் தொடர்ந்து போராளிகளை உருவாக்க வேண்டும்.

மாவீரர்களின் பெயரில் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இனி அனுமதி அளிக்கப்படாவிட்டாலும் அவர்களின் பெயரில் பரிசில்களையோ அல்லது பதக்கங்களையோ வழங்க எந்தவித தடையும் இருக்கமாட்டாது.

இப்படி அவர் கூறினார்.

(இ)

---

### இன்று

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் இன்று சிவானந்தா அணியை எதிர்த்து விநாயகர் அணி மோதுகிறது. இத்த ஆட்டம் இன்றுமாலை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

தாவடி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தினர் ஏற்பாடு செய்துள்ள ஈஸ்வராம்பா தினம் (சாயி சிறுவர் தினம்) இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தாவடி பிள்ளையார் கோவிலடி பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நடைபெறும்.

[த]

★ ★ ★

மீசாலை தென்கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று சாவகச்சேரி கிராம அபிவிருத்தி அலுவலர் க. இராஜராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது

### உற்சவங்கள்

பருத்தித்துறை அத்தியடி விநாயகர் ஆலயம், மிருசுவில் உசன் கந்தசாமி ஆலயம், சாவகச்சேரி விளைவேலி மருதடி விநாயகர் ஆலயம், சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயம், தொல்புரம் கொட்டடியம்பதி ஆதி முத்துமாரி அம்பாள் ஆலயம் ஆகியவற்றின் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

★ ★ ★

வட்டுக்கோட்டை உடுக்கிய வளை மகாகணபதிப் பிள்ளையார் கோவில் மண்டலாபிசேக பூர்த்தி விழா நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

[த-302-165-117]

### 'குமண' திரும்பியது

பருத்தித்துறையிலிருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமலை சென்ற ''குமண'' கப்பல் அங்கிருந்து கொழும்பில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய 53 நோயாளர்களுடன் நேற்று பருத்தித்துறையை வந்தடைந்தது.

அவர்களை இறக்கிவிட்டு கொழும்புக்கு சிகிச்சை பெறச் செல்லும் 103 பேருடன் ''குமண'' நேற்றே திருமலை நோக்கிப் புறப்பட்டது. (உ-165)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் காவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 5 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---


**PERSONAL NEW SCIENCE CENTRE**

ELILAKAM FRONT LANE, JAFFNA

**DAY CLASS**

ஆரம்பம்:- 12-05-92
நேரம் :- 9.00 மணி

**PURE/APP**
Mr. குணசிங்கம் B. Sc (Hons)

**CHEMISTRY**
Mr. செல்வா B Sc (Hons)

ZOOLOGY — பிரபல ஆசிரியர்
PHYSICS — பிரபல ஆசிரியர்
BOTANI — பிரபல ஆசிரியர்

(20866)


---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சோதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி

ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த சோதிப்பிள்ளை புண்ணியமூர்த்தி காலமானார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை புண்ணியமூர்த்தியின் அன்பு மனைவியும், தனபாக்கியம், பத்மராஜா, திருச்செல்வம் [ஜேர்மனி], சந்திரகுமார் [ஜேர்மனி], ரேணுகாதேவி [லண்டன்], சிவகுமார் [இந்தியா] ஆகியோரின் அன்புத் தாயாரும், சிறிரங்கநாயகி, செல்வநாயகம் [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுஜன், ஆரணி, சாருஜன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், வாகினி [லண்டன்] யின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 6-5 92 புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பு. பத்மராஜா (மகன்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
[20863]

---

### விசுவனாதி கதிரவேலு

சரவணையூரைப் பிறப்பிடமாகவும், 88/4, கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவனாதி கதிரவேலு நேற்று செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற முத்தாச்சியின் அன்புக் கணவரும் பாக்கியலெட்சுமி, பேரம்பலம், நகுலாம்பிகை, பரமானந்தசிவம், இரட்சணியதேவி, மகேஸ்வரி, சண்முகராசா [செந்தூரன் அரிசி ஆலை, நாவற்குழி], கிருபாதேவி, கண்ணுத்துரை ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை, பாக்கியலெட்சுமி, சோமசேகரம், இராஜேஸ்வரி, பொன்னுத்துரை [சவூதி அரேபியா], சிவராமலிங்கம் [பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்] யோகலெட்சுமி தங்கராசா [வர்த்தகர், வவுனியா] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 88/4, கோவில் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் 5 5-1992 செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

88/4, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

தகவல் :
க. கண்ணுத்துரை [மகன்]
[20852]

---

### இராசையா கமலநாதன் [கண்ணன்]

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசையா கமலநாதன் 3 5-92 இல் ஜேர்மனியில் அகாலமரணமானார். இவர் நரசிங்கம் இராசையா இலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், பேரம்பலம் [வர்த்தகர் அத்தியடி] காலஞ்சென்ற மனோன்மணி, மனோராணி மனோரஞ்சிதம், பேரின்பநாதன் [சுவிஸ்], நாகேஸ்வரி, குகநாதன் [சவுதி], தங்கேஸ்வரி, கோகிலநாதன் [டென்மார்க்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திராலெட்சுமி கனகலிங்கம் [வர்த்தகர், யாழ்ப்பாணம்], அமிர்தலிங்கம் [சுவிஸ்], நல்லையா [வர்த்தகர்], லோகேஸ்வரிநாயகி, முத்துலிங்கம், இரத்தினேஸ்வரி, சரவணபவானந்தன் [வர்த்தகர்] ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு இல 73 அம்பலவாணர் வீதி அத்தியடியில் இருக்கும் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. இராசையா
[தந்தை]

இல 73, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.
[20865]